# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No.118/2022**
**PW3**

| | | |
|---|---|---|
| Name | : | ஸ்ரீராம் |
| Father's/Husband's Name | : | அன்பு |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.06.2025.
A1,2, 4 to 7 present.

**முதல் விசாரணை**

நான் வீராணந்தல் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன் . நான் சென்னையில் இன்டீரியர் வேலை செய்து வருகிறேன் . ஆஜர்எதிரிகளை தெரியும். அனைவரும் எங்கள் கிராமத்தை சேர்ந்தவர்கள் . சுமார் 3 வருடத்திற்கு முன் நான் வீட்டில் இருந்தபோது கொரோனா நேரம் என்பதால் பாட்டுக்கச்சேரிக்கு சென்றுவிட்டு இருசக்கர வாகனத்தில் நானும் , என் நண்பர்கள் சந்தோஷ் ஆகியோர் பாட்டுக்கச்சேரி முடித்துவிட்டு புதூர்மாரியம்மன் கோவில் வழியாக வந்து கொண்டிருந்தபோது போலிஸ் இருந்ததால் வலது பக்கத்தில் சென்று கொண்டிருந்தபோது அங்கே பாலத்தின் அருகே 4 முதல் 5 பேர் கத்திக்கொண்டு வந்தார்கள். நாங்கள் பயந்துபோய் வீட்டிற்கு சென்றுவிட்டேன் . அங்கு போய் விசாரித்தபோது வெங்கடேசன் செத்துவிட்டாகதவும் , அதனால் அவர்இறந்து விட்டதாகவும் சொன்னார்கள் . இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 17.09.2021 ஆம் தேதி இரவு 9.30 மணியளவில் இறந்துபோன வெங்கடேசன் என்பவருடன் தர்மா உட்கார்ந்து கொண்டு அவருக்கு பின்னால் நாங்கள் மற்றுமொரு இருசக்கர வாகனத்தில் நானும், மணி ஆகியோரும் உட்கார்ந்து கொண்டு ஜீ.என் பாளையத்தில் இருந்து வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது , புதுப்பாளையம் மெயின் ரோடு TNCC குடோன் அருகே கல்லாற்று ஓடை தரைப்பாளத்திடம் நாங்கள் வந்துகொண்டிருந்தபோது அங்கு வழியில் TN25BM4194 என்ற Bolero pickup van நின்று கொண்டிருந்ததாகவும், அதற்கு பக்கத்தில் மதி , சுரேஷ் நின்று கொண்டிருந்ததாகவும் , அதற்கு பக்கத்தில் இருசக்கரவாகத்தில் அங்கு வந்த வினோத் , ஏழுமலை ஆகீயோர் எங்களை மறித்து நின்றுகொண்டிருந்ததாகவும், அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த வசந்தும் , வல்லரசும் எங்களை சுற்றி வளைத்தவுடன் நாங்கள் அனைவரும் தப்பி ஓடி , செடியில் மறைந்திருந்து பார்த்தபோது எனக்கு பின்னால் வந்த வெங்கடேசன் கால் தடுமாறி கீழே விழுந்தவுடன் எதிரிகள் மதி , வினோத், சுரேஷ் வீச்சறுவாளை கொண்டு வெங்கடேசனை பார்த்து ஆபாசமாக பேசி மதி என்பவர் அன்னிக்கு என் கையை வெட்டுன அதனால எனக்கு கை இல்லை உன்னை இன்னைக்கு வெட்டி சாய்த்தால்தான் என் ஆத்திரம் அடங்கும் என சொல்லிக்கொண்டு முன்பக்க தலை , வலது பக்க கழுத்து, வலது தோள்பட்டை ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும் , உடனிருந்த வசந்த் அறிவாளால் வலது தோள்பட்டை , இடது தோள்பட்டை , இடது முழங்கை ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும் , சுரேஷ் வீச்சறுவாளால் வெங்கடேசனின் இடது கால், வலது கால் ஆகிய இடங்களில் வெட்டினார் என்றும் , உடனிருந்த ஏழுமலை , வினோத், வல்லரசு வெங்கடேசனை விட்டுவிடாமல் வழிமறித்தும், இருந்தபோது அதை நான் நேரில் பார்த்துவெங்கடேசனின் தந்தை முருகன் என்பவருக்கு தகவல் சொன்னேன் என்றும் , உடனே அங்கு வந்த வெங்கடேசனின் தந்தை முருகன் , வெங்கடேசன் மனைவி ரத்னா ஆகியோர்கள் வெட்டுகாயத்துடன் இருந்த வெங்கடேசனை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவண்ணாமலை அரசு மருத்துவனைக்கு கொண்டு சேர்த்ததாகவும் , அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாகவும் மருத்துவர் கூறினார் என்றும் , இது சம்மந்தமாக வெங்கடேசனின் தந்தை முருகன் புதுப்பாளையம் காவல் நிலையத்தில் ஆஜர் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தாகவும் , அதன்பேரில் வழக்கு பதிவு

செய்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் , போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.